1971 டிசம்பர் 16]

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that the oil bunker berth and the connecting pipe to Manali is causing considerable inconvenience to the fishermen in the locality?

THE HON. Si. Pa. ADITANAR : I have no such information.

நவீன அரிசி ஆலைகள்

*** 476 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1971–72-ம் ஆண்டில், தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் நவீன அரிசி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : கூட்டுறவுத் துறையில் இயக்கப்படுகின்ற நவீன அரிசி ஆலைகள் நஷ்டத்தில் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. அவை லாபத்தில் இயங்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இதைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழு இருக்கிறது.

நிலக்கோட்டை கூட்டுறவு விற்பனைச்சங்கம்

*** 477 வினு—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தாலுகா விநியோக விற்பனைச் சங்கம் எப்பொழுது கலைக்கப்பட்டது?

(இ) அதன் தலைவர், இயக்குநர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) மதுரை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்டில் குற்றவாளிகளின்பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 1.43 லட்சம் ரூபாயைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பனை நுங்கு ஏற்றுமதி

*** 478 வினு—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பனை நுங்கு (Panai Nungu) ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இல்லை.